# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.07.20 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# விலங்கின நலம் பேணல்

**விலங்கின நலம் பேணலை ஏற்பாடு செய்வதற்கும் விலங்குகளைக் கொடுமைப் படுத்துதலைத் தடுப்பதற்கும்; (475 ஆம் அத்தியாயமான) விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 173.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

ச.வ.ஓ. 60/2025

**விலங்கின நலம் பேணலை ஏற்பாடு செய்வதற்கும் விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கும்; (475 ஆம் அத்தியாயமான) விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விலங்கின நலம் பேணல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப், பெயர்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:- சட்டத்தின் குறிக்கோள்கள்

(அ) விலங்குகளின்பால் அன்பு, இரக்கம் மற்றும் பொறுப்புள்ள நடத்தையை வளர்த்தலும் விலங்குகளின் பாதுகாப்பு, நலம் பேணல் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துதலும்;

(ஆ) விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதி லிருந்து பாதுகாத்தலும்; அத்துடன்

(இ) விலங்குகளை மனிதாபிமானமுறையில் நடாத்துவதற்கும் விலங்குகளின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடபடிகளையும் எடுப்பதற்கும் விலங்கு களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள பராமரிப்புக் கடமையொன்றை ஏற்றங்கீகரித்தலும்.

PL 15831 - 470 (2026/07)

**3.** ஆயிரத்துத்தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றிரெண்டாம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கின நோய்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் பொதுவான நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

சட்டத்தை நிருவகித்தல்

## பாகம் I

## அத்தியாயம் I

### விலங்குகளைக் கொடுமைப்படுத்துதல்

**4.** (1) ஆளொருவர்-

விலங்குகளைக் கொடுமைப் படுத்துதல் பற்றிய தவறு

(அ) விலங்கொன்றை அடித்தலோ, உதைத்தலோ, அதன்மேல் அளவுக்கதிகமாக ஏறிச் சவாரி செய்தலோ, அதன்மீது அளவுக்கதிகமாக சுமை ஏற்றுதலோ, அதனை அளவுக்கதிகமாக வேலை செய்வித்தலோ, அளவுக்கதிகமாக நடத்திச்செல்லுதலோ, அளவுக்கதிகமாக இனப் பெருக்கத்துக்காக வளர்த்தலோ, சித்திரவதை செய்தலோ, பயமுறுத்துதலோ அல்லது அதனை அவசியமற்ற வேதனைக் குட்படுத்தும் வகையில் வேறுவகையாக நடாத்துதலோ ஆகாது அல்லது விலங் கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளொரு வராக விருந்துகொண்டு அவ் விலங்கு அவ்வாறு நடாத்தப்படுவதனை அனுமதித் தலோ ஆகாது;

(ஆ) ஏதேனும் நோய், உடற்றகுதியீனம், காயம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக விலங்கொன்று பயன்படுத்தப்படுவதற்குத் தகுதியற்றதாகவுள்ள ஏதேனும் வேலையில் அல்லது தொழிலில் அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக அத்தகைய விலங்கை அவ்வாறு பயன்படுத்துதல் ஆகாது அல்லது அவ்விலங்குக்கு பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு அத்தகைய ஏதேனும் தகுதியற்ற விலங்கை அவ்வாறு பயன்படுத்தப்படுவதற்கு அனுமதித்தலாகாது;

(இ) விலங்கொன்றை அதன் இயற்கையான ஆற்றலை அல்லது வலிமையை விஞ்சுவதற்கு வலோத்காரப்படுத்துதல் உட்பட, அதன் உடனலத்துக்கும் நலம்பேணலுக்கும் தீங்குவிளைவிக்கக்கூடியவொருவகையில் அதனை பயிற்றுவித்தலாகாது;

(ஈ) வேண்டுமென்றும் நியாயமற்றமுறையிலும் ஏதேனும் நஞ்சை, ஊறுவிளைவிக்கும் அவுடதத்தை அல்லது பதார்த்தத்தை விலங்கொன்றுக்கு ஏற்றுதல் ஆகாது அல்லது வேண்டுமென்றும் நியாயமற்றமுறையிலும் ஏதேனும் நஞ்சு, ஊறுவிளைவிக்கும் அவுடதம் அல்லது பதார்த்தம் விலங்கொன்றினால் உட்கொள்ளப்படுவதனைச் செய்வித்தலோ அல்லது செய்விப்பதற்கு எத்தனித்தலோ ஆகாது;

(உ) விலங்கொன்றை அவசியமற்ற வேதனைக் குட்படுத்தும் அத்தகையதொரு நிலையில் ஏற்றிச்செல்லலோ அல்லது கொண்டு செல்லலோ ஆகாது;

(ஊ) ஒரு விலங்கிற்கு நடமாடுவதற்கான நியாயமான வாய்ப்பொன்றை அனுமதிப்பதற்கு உயரத்திலும் நீளத்திலும் அகலத்திலும் போதியளவிலான அளவையைக் கொண்டிராத ஏதேனும் கூண்டில் அல்லது இடத்தில் அவ்விலங்கை வைத்திருத்தலோ அல்லது அடைத்துவைத்திருத்தலோ ஆகாது;

(எ) விலங்கொன்றை நியாயமற்ற காலப்பகுதியொன்றிற்கு நியாயமற்றளவு குறுகிய அல்லது நியாயமற்றளவு பாரமான சங்கிலியால் அல்லது கயிற்றால் சங்கிலியிடுதல் அல்லது கட்டி வைத்திருத்தலாகாது அல்லது விலங்கொன்றை அவசியமற்ற வேதனைக் குட்படுத்தும் அத்தகைய ஒரு முறையில் அதனைக் கட்டிவைத்தல் அல்லது பிணித்துவைத்திருத்தலாகாது;

(ஏ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு அதற்கு உணவு, நீர் அல்லது உறைவிடம் வழங்குவதற்கு உட்கருத்துடன் தவறுதலாகாது;

(ஐ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு, அத்தகைய விலங்கு பொதுமக்களுக்கு பாரதூரமான மற்றும் உடனடி ஆபத்தொன்றாக அமைந்தாலொழிய அவ்விலங்கை அல்லது அதன் குட்டியைக் கொல்லுதலாகாது;

(ஒ) விலங்கொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளாகவிருந்துகொண்டு, அவ்விலங்குக்கு பட்டினி மற்றும் வேதனையை ஏற்படுத்தி அசட்டையாகவிருத்தலாகாது; அத்துடன்

(ஓ) வேறு ஏதேனும் வேண்டுமென்ற செயலின் மூலம் அல்லது செய்யாமையின்மூலம் விலங் கொன்றிற்கு அவசியமற்ற வேதனையை ஏற்படுத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்று கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக் கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**5.** கொடுமையானவொரு முறையில் ஏதேனும் விலங்கைக் கொல்லுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கொடுமையான முறையில் விலங்குகளைக் கொல்லுதல் பற்றிய தவறு

**6.** (1) ஏதேனும் கருத்தரித்துள்ள விலங்கை, பொது மக்களுக்குப் பாரதூரமான, உடனடி ஆபத்தாக அமையுமிடத்துத்தவிர, சொல்லப்பட்ட விலங்கை வேண்டுமென்று கொல்லுகின்ற அல்லது கொல்லப்படுவதற்கென அறிந்து கொண்டு விற்பனைசெய்கின்ற அல்லது ஒப்படைக்கின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது நான்கு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கருத்தரித்துள்ள விலங்குகளைக் கொல்லுதல் பற்றிய தவறு

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்குத்தொடுப்பொன்றில், எந்த விலங்கு தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த விலங்கு தவறு புரியப்பட்ட நேரத்தில் கருத்தரித்திருந்ததா என்பது பற்றிய கேள்வி எழுமாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அவ்விலங்கு கருத்தரித்திருந்தது என்ற பொருள்பட விலங்கு மருத்துவரொருவரின் கைப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன் முரணான சான்று இருந்தாலொழிய அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான எண்பிப்பாதலும் வேண்டும்.

**7.** (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஆளொருவர் ஏதேனும் நியாயமான காரணமின்றி விலங்கொன்றை கைப் பற்றுவதற்கு, அதற்குத் தீங்கு விளைவிப்பதற்கு அல்லது அதனைக் கொல்லுவதற்குப் பொறியொன்றை இடுதலோ அல்லது இடச் செய்வித்தலோ ஆகாது.

கைப்பற்றுதல் முதலிய வற்றுக்கான பொறிகளை இடுதல் தடை செய்யப் பட்டுள்ளது

**8.** ஆளொருவர் பறவையொன்றை-

பறவைகளைச் சட்டமுறையற்ற வகையில் தடுத்துவைத்தல் தடை செய்யப் பட்டுள்ளது

(அ) அதன் காலுக்கு ஒரு வளையத்தை, சங்கிலியை, நூலை, கயிற்றை அல்லது கம்பியைப் பொருத் துவதன்மூலம்;

(ஆ) அதன் கழுத்தை அல்லது உடலைச் சுற்றிய தடுப்பான்மூலம்; அல்லது

(இ) அதன் சிறகுகளைக் கத்தரிப்பதன்மூலம்,

அடைத்து வைத்தலாகாது.

**9.** ஆளொருவர், நியாயமான காரணமின்றி ஏதேனும் நோயுற்ற அல்லது ஊனமுற்ற விலங்கை ஏதேனும் பொது இடத்தில், தெருவில் அல்லது பூங்காவில் இறப்பதற்கு அனுமதித்தலாகாது.

நோயுற்ற அல்லது ஊனமுற்ற விலங்குகள் பொது இடங்களில் இறப்பதற்கு அனுமதித்தல் தடை செய்யப் பட்டுள்ளது

**10.** ஆளொருவர் விலங்கைகொன்றை கைவிடுதலாகாது.

விலங்குகளைக் கைவிடுதல் தடை செய்யப் பட்டுள்ளது

**11.** ஆளொருவர்-

தகைமையற்ற ஆளினால் சிகிச்சையளித்தல் தடை செய்யப் பட்டுள்ளது

(அ) விலங்கு மருத்துவரொருவரினால் அல்லது 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேத சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பேரவையுடன் பதிவு செய்யப்பட்ட, விலங்குகளுக்கு சிகிச்சையளித் தலிலான அனுபவத்துடன் ஆயுர்வேத மருத்துவத்தொழிலர் ஒருவரினால் தவிர்ந்த எவரேனும் ஆளினாலான ஏதேனும் மருத்துவ சிகிச்சைக்கு; அல்லது

(ஆ) விலங்கு மருத்துவரொருவரினால் தவிர்ந்த எவரேனும் ஆளினாலான ஏதேனும் அறுவை மருத்துவ சிகிச்சைக்கு,

ஏதேனும் விலங்கு உட்படுத்தப்படுவதற்கு அனுமதித்தலாகாது.

**12.**(1) ஆளொருவர், விலங்கொன்றின் இனப்பெருக்க ஆற்றலை அழித்தலை விலங்கு மருத்துவரொருவரினால் அல்லது அவரது மேற்பார்வையின்கீழ் புரியப்பட்டாலொழிய அத்தகைய விலங்கின் இனப்பெருக்க ஆற்றலை அழித்தலோ அல்லது அழிக்கச் செய்வித்தலோ ஆகாது.

சட்டமுறையற்ற வகையில் விலங்குகளின் இனப்பெருக்க ஆற்றலை அழித்தல் அல்லது அவற்றை கருந்தரி யாக்குதல் தடை செய்யப் பட்டுள்ளது

(2) ஆளொருவர் விலங்கொன்றினை கருந்தரியாக்குதலை விலங்கு மருத்துவரொருவரினால் புரியப்பட்டாலொழிய,

அத்தகைய விலங்கை கருந்தரியாக்குதலோ அல்லது மலடாக்கச் செய்வித்தலோ ஆகாது.

அழகு சாதனங்கள் முதலியவற்றைப் பரீட்சிப்பதற்காக விலங்குகளைப் பயன்படுத்துவது தடை செய்யப் பட்டுள்ளது

**13.** ஆளொருவர், அழகுசாதனங்களை, அழகுசாதனச் சேர்க்கைப்பொருட்களை அல்லது அழகுசாதன உற்பத்திப் பொருட்களைப் பரீட்சிப்பதற்கு, அவை விதித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவிருந்தாலொழிய விலங்கொன்றைப் பயன்படுத்துதலாகாது.

விற்பனைக்கான விலங்குகளுக்கு வேதனை அல்லது துன்பத்தை ஏற்படுத்தல் தடை செய்யப் பட்டுள்ளது

**14.** ஆளொருவர், ஏதேனும் விலங்குக்கு வேதனையை அல்லது துன்பத்தை விளைவிக்கக்கூடிய அத்தகைய சூழ் நிலைகளில் அவ்விலங்கை விற்பனைக்கு வைத்திருத்தலோ அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலோ ஆகாது.

வேதனையினால் பீடிக்கப்பட்ட விலங்கின் சட்டமுறையற்ற விற்பனை தடை செய்யப் பட்டுள்ளது

**15.** ஆளொருவர், சுகயீனத்தால், நோயினால், அவயத்தின் சிதைவினால், பட்டினியால், தாகத்தால், அளவுக்கதிகமான நெரிசலினால் அல்லது கொடூரமாக நடாத்தப்படுவதனால் வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஏதேனும் விலங்கை மருத்துவச் சிகிச்சை மற்றும் பராமரிப்பு நோக்கத்துக்காகத்தவிர, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ அல்லது விற்பனை செய்வதற்கான ஒப்பந்தஞ்செய்தலோ ஆகாது:

ஆயின், விதித்துரைக்கப்பட்ட விலங்கு உணவு அரசாங்க விலங்கு மருத்துவரொருவரின் அங்கீகாரத்தின் மீது விற்பனைக்காக முனைவு செய்யப்படலாம்.

வேட்டையாடுதல் முதலியவற்றுக் காக விலங் கொன்றைக் கிடைக்கக் கூடியதாக்குதல் தடை செய்யப் பட்டுள்ளது

**16.**ஆளொருவர், இன்னொரு விலங்கினால் வேட்டையாடப்படும், ஊறு விளைவிக்கப்படும் அல்லது கொல்லப்படும் நோக்கத்துக்காக எம்முறையிலேனும் விலங்கொன்றைக் கிடைக்கக்கூடியதாக்குதலாகாது.

தடைசெய்யப் பட்ட நிகழ்ச்சிகள்

**17.**(1) ஆளொருவர் (இதனகத்துப்பின்னர் “தடை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வரும் நிகழ்ச்சிகளுள் எதிலும் பங்குபற்றுதலோ, அதனை ஒழுங்குசெய்தலோ, முகாமைசெய்தலோ வசதிப்படுத்துதலோ அல்லது விளம்பரம் செய்தலோ ஆகாது-

(அ) விலங்குகளின் உயிர்களுக்கு ஊறு விளை வித்தல் அல்லது அழிவை ஏற்படுத்துதலுடன் சம்பந்தப்படுகின்ற விளையாட்டு வேட்டை அல்லது வேறு ஏதேனும் வகையினதான பொழுதுபோக்கு விளையாட்டு;

(ஆ) விலங்கொன்று சுடப்படுகின்ற அல்லது வேட்டையாடப்படுகின்ற நோக்கத்திற்கு எந்த குறிவைத்து சுடும் பந்தயத்தில் அல்லது போட்டியில் விலங்கொன்று அதன் அடைக்கப்பட்ட நிலையிலிருந்து விடுவிக் கப்படுகின்றதோ அந்த ஏதேனும் குறிவைத்துச் சுடும் பந்தயம் அல்லது போட்டி;

(இ) ஏதேனும் விலங்கை (விலங்கொன்றைக் கட்டி வைத்தல் உட்பட) வேறு ஏதேனும் விலங்குக்கு இரைப்பொருளாக அல்லது ஏதேனும் விலங்கை வேறு ஏதேனும் விலங்குடன் சண்டையிட தூண்டும் வகையில் அதனை அடைத்து வைப்பதனை உட்படுத்தும் ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சி அல்லது களியாட்டம்; அல்லது

(ஈ) ஏதேனும் விலங்கு சண்டையிடுதல் அல்லது போரிடுதல்.

(2) ஆளொருவர், அவர் எந்த வளவுகளின் சொந்தக் காரராகவுள்ளாரோ அல்லது எந்த வளவுகளுக்குப் பொறுப் பாகவுள்ளாரோ அந்த எவையேனும் வளவுகளைத் தடை செய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றுக்காகப் பயன்படுத்தப்படு வதற்கு அனுமதித்தலாகாது.

(3) ஆளொருவர், ஏதேனும் விலங்கைத் தடை செய்யப் பட்ட நிகழ்ச்சியொன்றிற்காக வழங்குதலோ அல்லது பயிற்று வித்தலோ ஆகாது.

தடைசெய்யப் பட்ட நடத்தையில் ஈடுபடு வதற்கான தண்டனை

**18**. ஏழு முதல் 17 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறிச்செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது

இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறுகள் தொடர்பான ஏற்பாடுகள் குறித்தசில செயல்களுக்கு ஏற்புடைய னவாதலாகாது

**19.** இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், பின்வருவனவற் றிற்கு ஏற்புடையனவாதலாகாது-

(அ) விலங்கு மருத்துவர் ஒருவரினால் அல்லது அத்தகைய செயல்முறைகளைச் செய்வதற்கு தகைமையுடைய ஆளொருவரினால் செய் யப்பட்ட, கால்நடை, எருமை, செம்மறியாடு அல்லது ஆடு என்பவற்றின் கொம்பறுத்தல், இனப்பெருக்க ஆற்றலை அழித்தல், குறியிடுதல், அடையாள எண்களைப் பொருத்துதல் அல்லது விலங்கொன்றின் மூக்கில் கயிறு இடுதல் அல்லது பொது இடங்களில் யானைகளின் நடமாட்டங்களை மட்டுப்படுத்தல்; அல்லது வேறு எவையேனும் விதித்துரைக்கப்பட்ட முகாமைத்துவ செயல்மு றைகளைச் செய்தல்;

(ஆ) 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்தின்கீழ் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக பண்ணைப் பறவைகளை தொகை குறைப்பு செய்தல் அல்லது விலங்குகளை அழித்தல்;

(இ) (272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டம் மற்றும் விலங் குகளை அறுத்தல் பற்றிய வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் புரியப்பட்ட, உணவு உட்கொள்ளலுக்காக விலங்குகளை அறுத்தல்;

(ஈ) ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தின்கீழ் பண்ணைப் பறவைகளை துறைகளின் நுழைவிலிருந்து பண்ணை களுக்கு, குஞ்சு பொரிப்பகங்களிலிருந்து பண்ணைகளுக்கு, அல்லது பண்ணைகளி

லிருந்து பதனிடல் அல்லது சந்தைப்படுத்தல் இடங்களுக்கு இடம்பெயர்த்தல்;

(உ) விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக் கிணங்க அவுடதங்கள் அல்லது அழகு சாதனங்களைப் பரீட்சிப்பதற்காக விலங்கு களைப் பயன்படுத்தல்;

(ஊ) விலங்கொன்றுக்கு ஏதேனும் தீங்கு விளை யாமல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் கமத்தொழில், மத, மீளுருவாக்க அல்லது கலாச்சாரச் செயற்பாட்டுக்காக அவ்விலங்கின் சொந்தக்காரர் ஒருவரினால் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் அத்தகைய விலங்கு பயன்படுத்தப்படுதல், பயிற்றுவிக்கப்படுதல் அல்லது வழங்கப் படுதல்;

(எ) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தின்கீழ் விலங்கு உற்பத்தித் தொடர் அல்லது அறுத்தலுக்கு அவசியமான உணவை திரும்பப் பெறல் அல்லது வரை யறுத்தல்;

(ஏ) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டம் மற்றும் (272 ஆம் அத்தியாயத்தின்) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின்கீழ் விலங்குகளை அறுத்தல் அல்லது தெரிந்து கழித்தல்; அத்துடன்

(ஐ) (469 ஆம் அத்தியாயமான) வன விலங்குகளின் கட்டுப்பாடும் முகாமைத்துவமும் மற்றும் தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அலு வலர்களினால் மனித உயிர், விலங்கு உயிர் அல்லது பயிர்கள் உட்பட ஆதனத்தின் பாதுகாப்புக்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தல்.

## அத்தியாயம் II

### விலங்குகளை ஏற்றிச்செல்லல்

**20.** ஆளொருவர், ஏதேனும் விலங்கை, அவசியமற்ற வேதனைக்கு அல்லது துயரத்துக்கு உட்படுத்தும் வகையிலான அல்லது அத்தகைய விலங்குக்கு ஊறு அல்லது ஆபத்து விளைவிக்கக்கூடிய சாத்தியமுள்ள வகையிலான அத்தகைய முறையொன்றில் அத்தகைய விலங்கைக் கொண்டு செல்லுதலோ, எடுத்துச் செல்லுதலோ அல்லது ஏற்றிச்செல்லுதலோ அல்லது கொண்டு செல்லுவித்தலோ, எடுத்துச்செல்லுவித்தலோ அல்லது ஏற்றிச்செல்லுவித்தலோ ஆகாது.

குறித்தசில நிலைமைகளின்கீழ் விலங்குகளை ஏற்றிச்செல்லல் தவறொன்றாதல் வேண்டும்

**21.**மேற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றியும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஏற்றிச்செல்லல் பற்றிய எவையேனும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாகவும், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவது ஏதேனும் விலங்கைக் கொண்டுசெல்லும், எடுத்துச்செல்லும் அல்லது ஏற்றிச்செல்லும் எவரேனும் ஆளினது கடமையாதல் வேண்டும்: -

விலங்குகளை ஏற்றிச்செல்லுதலுக்கு ஏற்புடையற்பாலதான நிபந்தனைகள்

(அ) ஏற்றும்போதும் இறக்கும்போதும், அத்துடன் ஏற்றிச் செல்லும்போதும் அத்தகைய விலங்குக்கு ஊறு ஏற்படுதல் தவிர்க்கப்படுகின்றது எனவும்;

(ஆ) ஏற்றப்படும் நேரத்திலிருந்து இறக்கப்படும் நேரம்வரை, இடைப்போக்கிலுள்ள காலப் பகுதியின்போது அவ்விலங்குக்கு போதிய இடவசதி, காற்றோட்டம், சுகாதார நிலைமைகள் மற்றும் நியாயமான சௌகரியம் என்பன வழங்கப்படுகின்றன எனவும்;

(இ) (i) சுகவீனமுற்ற; அல்லது

(ii) கருத்தரித்திருந்து இடைப் போக்கில் அல்லது அதன் பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் குட்டியொன்றை ஈன்றெடுக்கக்கூடிய நியாயமான சாத்தியமுள்ள,

விலங்கு எதுவும் மருத்துவ சிகிச்சை நோக்கங்களுக்காக அல்லது விலங்குகளின் சொந்தக் காப்புக்காகத் தவிர,

கொண்டுசெல்லப்படுவதில்லை, எடுத்துச் செல்லப்படுவதில்லை அல்லது ஏற்றிச்செல்லப் படுவதில்லை எனவும்;

(ஈ) விலங்கைக் கொண்டுசெல்வதற்கு, எடுத்துச் செல்வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனம்-

(i) அதன்கண் எடுத்துச்செல்லப்படும் விலங்கை இலகுவாக அவதானிப் பதற்கும் சோதனையிடுவதற்குமான வசதிகளையும்; அத்துடன்

(ii) அத்தகைய விலங்கை மனிதாபிமான முறையொன்றில் ஏற்றுவதற்கும் இறக்குவதற்குமான சாய்தள மொன்றையும்,

கொண்டுள்ளது எனவும்;

(உ) ஏதேனும் விலங்கை அவ்வாறு கொண்டு செல்வதற்கு, எடுத்துச்செல்வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தின் தளம், அத்தகைய விலங்கிற்கு ஊறு விளைவிக்கும் சாத்தியமுள்ள துவாரங்களோ அல்லது வெடிப்புகளோ அற்றதாக உள்ளதெனவும்;

(ஊ) ஏதேனும் விலங்கை அவ்வாறு கொண்டு செல்வதற்கு, எடுத்துச்செல்வதற்கு அல்லது ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனம், ஏற்றிச்செல்லப்படும் விலங்கின் வகை, பிரயாணம் செய்யவேண்டிய தூரம், காலநிலை, வெப்பநிலை மற்றும் நிலப்பரப்பு போன்ற சூழல்சார் காரணிகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, சூழ்நிலைகளுக்குத் தோதானவாறான அத்தகைய பாதுகாப்பை விலங்குக்கு வழங்கும் வகையில் போதியளவு மூடுகையைக் கொண்டுள்ளது எனவும்;

(எ) மூர்க்கத்தனம் கொள்ளக்கூடிய போக்குள்ள விலங்கு எதுவும், அத்தகைய வேறு விலங்கு களைத் தாக்குவதை அல்லது அவற்றிற்கு

தீங்கு அல்லது ஊறு விளைவிப்பதை தடுப்பதற்குப் போதிய முற்காப்பு எடுக் கப்பட்டாலொழிய அத்தகைய வேறு விலங்கு களுடன் சேர்த்துக் கொண்டு செல்லப் படுவதில்லை, எடுத்துச் செல்லப்படுவதில்லை அல்லது ஏற்றிச் செல்லப்படுவதில்லை எனவும்;

(ஏ) ஏற்றப்படும் இடத்திலிருந்து இறக்கப்படும் இடம்வரை அத்தகைய கொண்டு செல்லுதல், எடுத்துச்செல்லுதல் அல்லது ஏற்றிச்செல்லுதல் அவசியமற்ற தாமதமின்றியும் ஏதே னும் விலங்கை நியாயமற்ற காலப்பகுதி யொன்றிற்கு அடைத்துவைக்காமலும் நிறை வேற்றப்படுகின்றது எனவும்;

(ஐ) ஏற்றிச்செல்லப்படும்போது விலங்கொன்றிற்கு உணவு மற்றும் நீர் கொடுக்கப்படுதலாகாது எனப் போக்குவரத்து நிபந்தனைகள் தேவைப் படுத்துகின்றவிடத்து, உணவு அல்லது நீர் இன்றி அவ்விலங்கினால் தாங்கிக் கொள்ளக்கூடியதைவிட நீண்ட நேரத்திற் குப் பிரயாணம் நீண்டதாகவில்லை என உறுதிப்படுத்துவதற்கு கவனம் எடுக்கப் படுகின்றது எனவும்;

(ஒ) அந்தந்த இனங்களைச் சேர்ந்த விலங்குகளைக் கவனத்திற்கொண்டு விதித்துரைக்கப் படக் கூடியவாறாக பிரயாணத்தின் கால வேளையைப் பொறுத்து, விலங்குகளுக்கு போதிய உணவு, நீர் மற்றும் ஓய்வு நேரம் வழங்கப்படுகின்றன எனவும்; அத்துடன்

(ஓ) நீண்ட பிரயாணங்களின்போது செயல் முறைக்கு உகந்தவாறாகவுள்ளவிடத்து விலங்குக்கு ஓய்வு, உணவு மற்றும் நீர் வழங்கப்படுவதையும் அதன் சுகாதாரத்தைக் கவனிப்பதையும் இயலச்செய்வதற்குப் போதிய நிறுத்தங்கள் செய்யப்படுகின்றன எனவும்.

சட்டமுறையற்ற வகையில் ஏற்றிச் செல்வதில் ஈடுபடு வதற்கான தண்டனைகள்

**22**. இருபதாம் அல்லது 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் III

### பரிசோதனை மற்றும் கற்பித்தல் நோக்கங்களுக்காக உயிருடனுள்ள விலங்கினங்களைப் பயன்படுத்துதல்

விலங்குகளின் மீதான பரிசோத னைகள்

**23.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளவை எதுவும், உயிரைப் பாதுகாத்தல், ஆயுளை நீடித்தல், துயரத்தைப் போக்குதல், ஏதேனும் நோயை எதிர்த்தல், உற்பத்தித்திறனை சீராக்கல், மனிதர்கள், விலங்குகள் அல்லது தாவரங்களின்மீது மருந்தாக்கப்பொருட்களின் காப்பு அல்லது பயனுடையதன்மையை பரீட்சித்தல் அல்லது கற்பித்தலுக்காக விலங்குகளை பயன்படுத்துதல் என்பவற்றுக்குப் பயனுள்ளதாகவுள்ள அறிவு பற்றிய புதிய கண்டுபிடிப்பு மூலமான முன்னேற்ற நோக்கத்துக்காக விலங்குகளின்மீது பரிசோதனைகள் புரியப்படுவதனை சட்டமுறையற்றதாக்குதலாகாது:

ஆயின், அத்தகைய பரிசோதனைகளை நடாத்துதல் பற்றிய முடிபுகளை எடுக்கும்போது சம்பந்தப்பட்ட திறத்தவர், கணினி மாற்றுருக்கள் மற்றும் வேறு கட்புல, செவிப்புல முறைகள், செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட மாதிரி உருக்கள், மனித இன ஆராய்ச்சிக்குரிய பிரேதங்கள் மற்றும் மருத்துவ அனுபவங்கள் உட்பட, உயிருள்ள விலங்கினங்கள் மீதான பரிசோதனையை உட்படுத்தாத மாற்றுமுறைகள் மற்றும் உபாயங்களின் கிடைக்கக்கூடிய தன்மையை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**24.** (1) விலங்கின நலம்பேணல் அலுவலர் ஒருவர்-

நுழைதல் மற்றும் சோதனை யிடுவதற்கான தத்துவம்

(அ) அத்தகைய அலுவலரினால் நியாயமானதென கருதப்பட்ட எச்சந்தர்ப்பத்திலும் நுழையலாம் என்பதுடன் எந்த நிறுவனம் அல்லது இடத்தில் விலங்கினங்கள்மீதான பரிசோதனைகள் நடாத்தப்படுகின்றனவோ அந்த ஏதேனும் நிறுவனம் அல்லது இடத்தை சோதனையும் இடலாம்; அத்துடன்

(ஆ) விலங்கினங்கள்மீதான பரிசோதனைகள் தொடர்பில் எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் தரவினை சமர்ப்பிக்குமாறு அவ்வாளை தேவைப் படுத்தலாம்.

(2) விலங்கொன்றின் பரிசோதனை தொடர்பான ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவா னொருவரினாலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அவை இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் IV

## செல்லப்பிராணிகளாக விலங்கினங்களை விற்பனைசெய்வதை ஒழுங்குபடுத்துதல்

**25.** (1) ஒரு செல்லப்பிராணிக்கடை அல்லது செல்லப் பிராணி வளர்க்கும் நிலையம் எந்த இடப்பரப்பில் அமைக்கப்படவுள்ளதோ அந்த இடப்பரப்பிலுள்ள உள்ளூரதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிம மொன்றின் அதிகாரத்தின்கீழன்றி ஆளெவரும் செல்லப் பிராணிக்கடையொன்றை அல்லது செல்லப்பிராணி வளர்க்கும் நிலையமொன்றை வைத்திருத்தலோ அல்லது பேணுதலோ ஆகாது.

செல்லப் பிராணிக் கடைகளையும் செல்லப்பிராணி வளர்க்கும் நிலையங் களையும் கிரமமாக்குதல்

(2) செல்லப்பிராணிக்கடையொன்றை அல்லது செல்லப் பிராணி வளர்க்கும் நிலையமொன்றை வைத்திருப்பதற்கு அல்லது பேணுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள்,

உள்ளூரதிகாரசபையினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான படிவத்திலும் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்மீதும் உரிம மொன்றுக்கான ஒரு விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் உரிமமும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் அது எந்நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுகின்றதோ அந்நிபந்தனைகளைக் குறித் துரைத்தலும் வேண்டும்.

(4) செல்லப்பிராணிக்கடையொன்றை அல்லது செல்லப் பிராணி வளர்க்கும் நிலையமொன்றை வைத்திருப்பதற்காக அல்லது பேணுவதற்காக உரிமமொன்றை வழங்குவதா என்பதைத் தீர்மானிப்பதில் உள்ளூரதிகாரசபையொன்று பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்: -

(அ) அளவு, வெப்பநிலை, காற்றோட்டம், வெளிச்ச மிடுகை மற்றும் தூய்மை என்பன தொடர்பில் பொருத்தமாகவுள்ள இடவசதியில் விலங்குகள் எல்லா நேரங்களிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்றும்;

(ஆ) உணவும் நீரும் விலங்குகளுக்குப் போதி யளவில் வழங்கப்படுதல் வேண்டுமென்றும்;

(இ) முலையூட்டிகளாகவுள்ள விலங்குகள் விதித் துரைக்கப்பட்ட வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதில் விற்பனை செய்யப்படுதலாகாதென்றும்;

(ஈ) தொற்றுநோய்கள் பரவுவதனைத் தடுப் பதற்கான எல்லா நியாயமான முற்காப்புகளும் எடுக்கப்படுதல் வேண்டுமென்றும்;

(உ) தீ அல்லது வேறு அவசரகால நிலைமை களுக்குப் பதிலிறுப்பதற்குத் தோதான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டு மென்றும்; அல்லது

(ஊ) உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் அரசாங்க விலங்கு மருத்துவரிடமிருந்து அவசியமான அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டிருத்தல்.

(5) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று வழங்குகைத் திகதியிலிருந்து பன்னிரெண்டு மாதகாலப் பகுதியொன்றுக்கு வலுவிலிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒருதடவையில் பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட மேலதிகக் காலப்பகுதிகளுக்குப் புதுப்பிக்கவும்படலாம்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளை அல்லது உரிமமொன்று எந்த நிபந்தனைக்கமைய வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் நிபந்தனையை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

உரிமத்தை இடை நிறுத்துதல் அல்லது இல்லா தாக்குதல்

**26.** (1) இருபத்தைந்தாம் பிரிவின் கீழ் உள்ளூரதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்று பின் வருமாறுள்ளவிடத்து உள்ளூரதிகாரசபையினால் இடை நிறுத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்:-

(அ) உரிமம்பெற்றவர் பொய்யான, பிழை வழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவல் களை வழங்கியுள்ளவிடத்து;

(ஆ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளவிடத்து; அல்லது

(இ) அத்தகைய உரிமம் எந்த நியதி நிபந்தனை களுக்கமைய வழங்கப்பட்டதோ அந்த எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு மீறுதலாக அல்லது முரணாக உரிமம்பெற்றவர் செயலாற்றியுள்ளவிடத்து.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று விடயத்துக்கேற்ப, இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இல்லாதாக்கப்படுமிடத்து,

உரிமம்பெற்றவரினால் கொடுக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட எழுத்திலானவொரு தொடர்பாடல்மூலம் அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகைபற்றி உரிமம் பெற்றவருக்கு உடனடியாக அறிவிப்பது உள்ளூரதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

மேன் முறையீடுகள்

**27.** (1) விடயத்துக்கேற்ப, உரிமமொன்றின் வழங்குகையை அல்லது புதுப்பித்தலை மறுக்கின்றதான அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றினை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் அவரினால் பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள், உள்ளூரதிகாரசபை என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சருக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் செய்யப்படுதல் வேண்டும்.

விலங்கினங் களை தெருக்கள் முதலியன வற்றில் விற்பனை செய்தல் பற்றிய தவறு

**28.** (அ) தெருவொன்றின், வீதியின் அல்லது பொது இடத்தின் ஏதேனும் பாகத்தில் செல்லப் பிராணிகளாக விலங்கினங்களை விற்பனை செய்யும் தொழிலை கொண்டு நடாத்துகின்ற; அல்லது

(ஆ) பதினாறு வயதுக்குக்கீழ் உள்ள ஆளொருவருக்கு செல்லப்பிராணியொன்றாக ஏதேனும் விலங் கினத்தை விற்பனை செய்கின்ற,

எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு

அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

செல்லப்பிராணிக் கடைகளை சோதனையிடல்

**29.** (1) விலங்கின நலம்பேணல் அலுவலர் ஒருவர், விலங்கினங்களுக்கு மத்தியில் தொற்றுநோய்கள் பரவு வதனைத் தடுப்பதற்கு காலத்துக்குக்காலம் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முற்காப்பு வழிமுறை களுடனான இணங்கியொழுகுகைக்கமைய இச்சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளதா அல்லது புரியப்படுகின்றதா என நிச்சயிக்கும் நோக்கத்துக்காக நாளின் எல்லா நியாயமான நேரங்களிலும் ஏதேனும் செல்லப்பிராணிக் கடையினுள் நுழைந்து சோதனையிடலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விலங்கின நலம்பேணல் அலுவலர் ஒருவர் நுழைதல் அல்லது சோதனையிடுதலுக்கான தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அவருக்கு வேண்டு மென்று முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவ்வாளை தாமதப்படுத்துகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி யொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக “செல்லப் பிராணிக் கடை” என்பது, தனிப்பட்ட வாழ்மனை ஒன்று உட்பட எவரேனும் ஆள் செல்லப்பிராணிகளாக விலங்கினங்களை விற்பனை செய்யும் தொழிலொன்றை கொண்டுநடாத்தும் எவையேனும் வளவுகள் மற்றும் வைத்திருப்பவர் அல்லது வேறு எவரேனும் ஆளினால் விற்பனைசெய்யும் நோக்கத்துக்காக அத்தகைய எவையேனும் வளவுகளில் விலங்கினங்களை வைத்திருத்தல் அல்லது பேணுதல் எனப் பொருள்படும்.

## பாகம் II

### விலங்கின நலம்பேணல் மதியுரைக்குழுவைத் தாபித்தல்

விலங்கின நலம்பேணல் மதியுரைக் குழு வொன்றைத் தாபித்தல்

**30.** (1) பின்வருவோரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "மதியுரைக் குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விலங்கின நலம் பேணல் மதியுரைக் குழு என அழைக்கப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) கால்நடை அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்படும் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ii) உள்ளூரதிகாரசபைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்படும் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iii) கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்படும் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iv) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்தினால் நியமிக்கப்படும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(v) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(vi) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தி இரண்டாம் ஆண்டின் 41 ஆம் இலக்க, தேசிய மிருகக்காட்சிச்சாலைச் சட்டத் தினால் நியமிக்கப்படும் தேசிய மிருகக் காட்சிச்சாலையின் பணிப்பாளர் தலைமை யதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(vii) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் நியமிக்கப்படும் மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை யதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(Viii) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் விலங்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர்;

(ix) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அவரது நியமத்தர்;

(x) இங்கு விலங்கு மருத்துவர்கள் பேரவையின் தலைவர்; அத்துடன்

(xi) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி அல்லது அவரது நியமத்தர்.

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்கள்:-

(i) கால்நடை அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச் சுக்கான செயலாளரினால் பெயர்குறிக் கப்படும் விலங்கின நலம்பேணலில் முனைப்பாக ஈடுபடுகின்ற விலங்கு மருத்துவரொருவர்;

(ii) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தி எட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட முறையே விலங்கு விஞ்ஞானம், விலங்கியல் மற்றும் நீர்வாழ் உயிரின விஞ்ஞானம் என்னும் துறைகளில் விலங்கு பரிசோதனையில் ஈடுபட்டுள்ள மூன்று கல்விமான்கள்;

(iii) பதிவுசெய்யப்பட்ட விலங்குக் கழகங்களினால் பெயர்குறிக்கப்படும் ஆய்வுகூட விலங்குகளுடன் பதிவுசெய்யப்பட்ட கழகங்களிலிருந்தான ஆளொருவர்;

(iv) பதிவுசெய்யப்பட்ட விலங்கின நலம்பேணல் ஒழுங்கமைப்புகளிலிருந்தான ஐந்து ஆட்கள்;

(v) பண்ணைப் பறவைகள் மற்றும் கால்நடை கைத்தொழில்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இரண்டு ஆட்கள்; அத்துடன்

(vi) ஆயிரத்துதொள்ளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள் வேதச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆயுள் வேத மருத்துவப் பேரவையுடன் பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத மருத்துவத் தொழிலரொருவர்.

(2) அமைச்சர், மதியுரைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மத்தியிலிருந்து மதியுரைக்குழுவின் தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) அமைச்சர் காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தக் கூடியவாறாக பின்வருவனபற்றி அமைச்சருக்கு மதியுரை யளிப்பது மதியுரைக்குழுவின் கடமையாதல் வேண்டும் –

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துதல் மற்றும் பரிசீலனைசெய்தலின்மீது;

(ஆ) விலங்கினங்களை பாதுகாப்பதற்கும் விலங்கினங் களைக் கொடுமைப்படுத்துவதைத் தடுப்பதற்கும் எடுக்கப்படுவதற்கு தேவையான வழிமுறைகள்;

(இ) விலங்கின நலம் பேணல் பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தலின்மீது;

(ஈ) எல்லாத் துறைகளுக்கிடையேயும் பொதுமக்களுக் கிடையேயும் இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்;

(உ) விலங்கினங்களை மனிதாபிமானமுறையில் நடாத்துதலும் விலங்கின நலம் பேணலும் தொடர்பான கல்வியை மேம்படுத்துதல்;

(ஊ) விலங்குகள் மீதான பரிசோதனைகளுக்கான ஆய்வுகூட வசதிகள் தொடர்பான ஏதேனும் கருமம்; அத்துடன்

(எ) எந்தக் கருமம் பற்றி இச்சட்டத்தின்கீழ் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பானவை.

(4) மதியுரைக் குழுவானது, ஆகக்குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை கூடுதல் வேண்டும்.

(5) மதியுரைக்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், இறப்பு, பதவி விலகுகை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலேயொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக ஒரு மேலதிகக் காலத்துக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராகவிருத்தலும் வேண்டும்.

(6) மதியுரைக் குழுவானது, அதன் கூட்டங்கள் சம்பந்தமாகவும் அதன் கடமைகளைப் புரிதல் தொடர்பாகவும் அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(7) மதியுரைக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் பதின்மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் III

## பொதுவான ஏற்பாடுகள்

விலங்கெதுவும் கொடுமைப் படுத்தலுக்கு உட்படு தலாகாது

**31**. (1) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் செயல் மனிதாபிமான முறையொன்றில் நிறைவேற்றப்பட்டாலேயொழிய அத்தகைய செயலுக்கு விலங்கொன்று உட்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக "மனிதாபிமான முறை" என்பது, அத்தகைய ஏதேனும் விலங்குக்கு மிகக்குறைந்த அளவிலான துன்பம், வேதனை, துயரம் அல்லது மன வேதனையை ஏற்படுத்துகின்ற அத்தகைய முறையில் செயலொன்றை நிறைவேற்றல் அல்லது புரிதல் எனப் பொருள்படும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீரப் பளிக்கப்படுவதன்மீது நான்கு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகள் பிடியாணை யின்றி கைது செய்தகு தவறுகளாதல் வேண்டும்

**32**. இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தினுள் பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

**33.** புலனாய்வொன்றைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக, விலங்கின நலம் பேணல் அலுவலர் ஒருவர் உப பொலிசுப் பரிசோதகர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள பொலிசு அலுவலர் ஒருவருடன் சேர்ந்து, நீதிவான் நீதிமன்றத்திலிருந்து ஆணைப்பத்திரம் ஒன்றைப் பெற்றதன் மேல்- தவறொன்று புரியப்படுதல் அல்லது தொடர்ந்து புரியப் படுதலைத் தடுத்தல்

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப் பட்டுள்ளது, புரியப்படுகின்றது அல்லது புரியப் படப்போகின்றது என நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ள எவையேனும் வளவுகளினுள் நுழைந்து அவற்றை சோதனையிடலாம்;

(ஆ) அத்தகைய வளவுகளில் பேணப்பட்ட விலங்குகள் தொடர்பிலான எவையேனும் புத்தகங்களை, இடாப்புகளை அல்லது இலத்திரனியல் தரவு களை மற்றும் பதிவேடுகளைப் பரிசோதனை செய்யலாம்;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் புரிகை அல்லது நிகழவுள்ள புரிகை தொடர்பாக அத்தகைய எவையேனும் வளவுகளில் உள்ள எவரேனுமாளை வினவலாம்; அல்லது

(ஈ) அத்தகைய தவறு தொடர்பான ஏதேனும் புகைப்படம் அல்லது காணொளியை எடுக்கலாம்:

ஆயின், பெறப்படும் தகவலின் மேல், அத்தகைய விலங்கின நலம்பணல் அலுவலர், தவறொன்று புரியப் படுவதனை அல்லது தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டமை பற்றிய சான்றாகவமையக்கூடிய ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை அழித்துவிடுவதனைத் தடுப்பதற்கு அல்லது ஏதேனும் விலங்கின் நலம் பேணலை உறுதிப்படுத்துவதற்கு (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளுள் எவற்றையும் எடுத்தல்

அவசரமானவகையில் தேவைப்படுத்தப்படுகின்றது எனக் கருதுமிடத்து, ஆணைப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு முன்னர் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நடவடிக்கைகளுள் எவற்றையும் எடுத்தல் அத்தகைய அலுவலருக்கு சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அலுவலர், அத்தகைய நடபடிகளை எடுத்ததிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள், ஆணைப்பத்திரம் ஒன்றைப் பெறாமல் எடுக்கப்பட்ட நடபடிகள் மற்றும் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை அனுமதித்த காரணங்கள் பற்றிய அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

விலங்கின நலம் பேணல் பணிப்புகளை வழங்கல்

**34.** (1) முப்பத்தி மூன்றாம் பிரிவின்கீழ் புலனாய்வொன்று நிறைவேற்றப்படுவதன் மேல், விலங்கொன்று-

(அ) பராமரிக்கப்படாதுள்ளது;

(ஆ) விதந்துரைக்கப்பட்ட விலங்கு வேளாண்மை அல்லது வளர்த்தல் செயல்முறைகளுக்கிணங்க போதிய உணவும், நீரும் அல்லது உறைவிடமும் வழங்கப்படாதுள்ளது;

(இ) மிகையான வேதனையை அனுபவித்துக் கொண்டுள்ளது;

(ஈ) விலங்கு மருத்துவ சிகிச்சை அதற்குத் தேவையாகவுள்ளது; அல்லது

(உ) வேலைசெய்வதற்குத் தகுதியற்ற நிலையிலிருக்கையில் வேலை செய்விக்கப்படுகின்றது,

என விலங்கின நலம் பேணல் அலுவலர் நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அவ் விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட படிவம் “அ” இல் (இதன

கத்துப்பின்னர் "பணிப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "விலங்கின நலம் பேணல் பணிப்பு" என அழைக்கப்பட வேண்டிய எழுத்திலான பணிப்பொன்றை அவர் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்றைப் பெறுவதன் மேல், அவ்விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் பரிகரிப்பு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் குறிப்பாக பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது பலவற்றைச் செய்தலும் வேண்டும்:-

(அ) பணிப்பில் கூறப்பட்ட முறையில் விலங்கைப் பராமரித்தல் அல்லது நடாத்துதல்;

(ஆ) பணிப்பில் கூறப்பட்ட உணவை, நீரை, ஓய்வை, உறைவிடத்தை அல்லது வேறு வாழ்க்கை நிலைமைகளை அவ்விலங்குக்கு வழங்குதல்;

(இ) உட்பந்திகள் (அ) அல்லது (ஆ) இல் கூறப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அவ்விலங்குக்கு மீள்வாழிடமளித்தல்; அல்லது

(ஈ) அப்பணிப்பில் குறிப்பிடப்பட்ட அத்தகைய தேதி வரை அவ்விலங்கு எவ்வளவுகளில் வைத் திருக்கப்படுகின்றதோ அவ்வளவுகளிலிருந்து அதனை இடமாற்றுவதனைத் தவிர்த்தல்.

(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், விலங்கின நலம் பேணல் அலுவலர், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பரிகரிப்பு நடவடிக்கைகளுள் எவற்றையும் எடுத்தல் விலங்கின் மிகச்சிறந்த அக்கறையிலாகும் என அபிப்பிராயப்படுகின்றவிடத்து, தாமே அவ்வாறு செய்வதனைத் தடுத்தலாகாது. அத்தகையவொரு பட்சத்தில் விலங்கின நலம் பேணல் அலுவலர், அத்தகைய நடபடிகளை எடுப்பதற்கான அவரது காரணங்களைப் பதிதல் வேண்டும் என்பதுடன் அவ்விடப்பரப்பின் பொலிசு நிலையத்தில் முறைப்பாடொன்றை உடனடியாகச் செய்தலும் வேண்டும்.

(4) நியாயமான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பொன்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(5) ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் இப்பிரிவின்கீழ் பணிப்பொன்றை வழங்குதலானது, அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் இச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு குற்றவழக்கொன்றைத் தொடுத்தலை அதுவே பங்கப்படுத்துதலாகாது.

புலனாய்வு, விளக்கம் என்பவற்றின் போது விலங்கின நலம் பேணலை உறுதிப்படுத்துவதற்கு அவற்றை உறைவிடம் மற்றும் பராமரிப்பில் இடுதல்

**35.** நீதிவானொருவர், விலங்கின நலம் பேணல் அலுவலர் ஒருவரினால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் அல்லது அவரது சொந்தப் பிரேரணையின்மீது, எந்த விலங்கு தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதென, புரியப்பட்டுவருகின்றதென அல்லது புரியப்படும் சாத்தியமுள்ளதென சார்த்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் விலங்கை தவறொன்று தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கென அல்லது அத்தகைய விலங்குக்கு அவசியமான பராமரிப்பு அல்லது மருத்துவச் சிகிச்சையை வழங்கும் நோக்கத்துக்காக பின்வருவோரின் பராமரிப்பிலும் கட்டுக்காப்பிலும் இடுதல் வேண்டும் என கட்டளையை ஆக்கலாம்-

(அ) விலங்கு பராமரிப்பு நிலையமொன்று;

(ஆ) எந்த அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் முதன்மைக் குறிக்கோளானது விலங்கினங்களின் நலம் பேணலுடன் சம்பந்தப்படுகின்றதோ அந்த அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்று; அல்லது

(இ) 36 ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர்.

**36.** இச்சட்டத்தின்கீழ் எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் விலங்கின நலம் பேணல் அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு முட்டுக்கட்டை யிடுகின்ற அல்லது அவரை எதிர்க்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவா னொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

விலங்கின நலம் பேணல் அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு முட்டுக்கட்டை யிடுதல் தவறொன்றாதல் வேண்டும்

**37.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக் கொன்று பின்வருவோரினால் தொடுக்கப்படலாம்-

எவரினால் குற்றவழக்குகள் தொடுக்கப்பட முடியும் என்பது

(அ) விலங்கின நலம் பேணல் அலுவலர் ஒருவர்;

(ஆ) சமாதான அலுவலர் ஒருவர்; அல்லது

(இ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்ற வியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி நியாயாதிக்கத்தைக்கொண்ட நீதிவானொருவருக்குச் செய்யப்பட்ட முறைப் பாடொன்றின் அடிப்படையிலான எவரேனும் ஆள்.

**38.**(1) விலங்கொன்று தொடர்பாக எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படு கின்றவிடத்து, நீதிவான், விதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக-

குற்றத்தீர்ப்புக்குப் பின்னர் இழப்பிக்கப் படுதல் மற்றும் செலவுகளை மீளளித்தல்

(அ) தவறானது எந்த விலங்கு தொடர்பில் புரியப் பட்டதோ அந்த விலங்கை இழப்பிப்பதற்காக;

(ஆ) தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் ஆயுதத்தை, கருவியை அல்லது வாகனத்தை இழப்பிப்பதற்காக; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் விலங்கு எந்த ஆளின்; அல்லது நிறுவனத்தின் பராமரிப்பிலும் கட்டுக்காப்பிலும் இடப்பட்டதோ அந்த எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் உறப்பட்ட செலவுகளை மீளளிப்பதற்காக,

கட்டளையிடலாம்.

(2) விலங்கொன்று (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் இழப்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையை ஆக்கும் நீதிவான், அத்தகைய விலங்கு-

(அ) விலங்கு பராமரிப்பு நிலையமொன்றின் கட்டுக் காப்புக்கு கையளிக்கப்படுதல் வேண்டுமென;

(ஆ) எந்த அரச சார்பற்ற ஒழுங்கமைப்பின் முதன்மைக் குறிக்கோள் விலங்கினங்களின் நலம் பேணலுடன் சம்பந்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கு கையளிக்கப்படுதல் வேண்டுமென; அல்லது

(இ) எந்த ஆள் விலங்குகளைப் பராமரிப்பதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார் என நீதிமன்றம் திருப்திப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின் கட்டுக்காப்புக்கு கையளிக்கப்படுதல் வேண்டுமென,

பணிக்கலாம்.

(3)அத்தகைய விலங்கைப் பராமரிப்பது, விடயத்துக்கேற்ப அத்தகைய விலங்கு பராமரிப்பு நிலையம், அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு அல்லது ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) ஆயுதம், கருவி அல்லது வாகனத்தின் சொந்தக்காரர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் வாழ்க்கைத்துணையாக

அல்லது பிள்ளையாகவிராத மூன்றாம் திறத்தவர் ஒருவராக விருக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான இழப்பித்தற் கட்டளையொன்று ஏன் ஆக்கப்படுதலாகாது எனக் காரணங்காட்டும்படி அத்தகைய சொந்தக்காரருக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர் மட்டுமே அத்தகையவொரு கட்டளை ஆக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சொந்தக்காரர் அத்தவறு புரியப்படுவதில் ஆயுதம், கருவி அல்லது வாகனம் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான எல்லா முற்காப்புகளையும் எடுத்திருந்தார் என அல்லது ஆயுதம், கருவி அல்லது வாகனம் அவர் அறியாமல் அதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என நீதிமன்றம் திருப்தியுறும்வகையில் அவர் நிலைநாட்டுவாராயின் அத்தகைய கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது:

ஆயின், ஆயுதம், கருவி அல்லது வாகனம் இரண்டாவது தடவையாக ஒரு தவறைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து, நீதிவான் அத்தகைய ஆயுதம், கருவி அல்லது வாகனத்தை இழப்பிக்கும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மூலம் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் விலங்கு, ஆயுதம், கருவி அல்லது வாகனம்-

(அ) அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் செய்யப்படாவிடின், எந்தத்தேதியன்று அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்றைச் செய்வதற்கான விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து முழுமையாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின், எந்தத் தேதியன்று மேன்முறையீடு மீதான கட்டளை இறுதியாக உறுதிப்படுத்தப்படுகின்றதோ

அந்தத் தேதியிலிருந்து முழுமையாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கையாளப்படுதல் வேண்டும்.

விலங்கினங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இடையீடு செய்வதற்கான உரிமைகள்

**39.** விலங்கொன்று நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளின் விடயமொன்றாக வருகின்றவிடத்து, விலங்கின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கு நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளில் இடையீடுசெய்வது பின்வருவோருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) விலங்கின நலம் பேணல் சங்கமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ஆ) அவ்விலங்கு சார்பாக பிரதிநிதித்துவம் செய்வதற்கு அச்சூழ்நிலைகளின்கீழ் பொருத்தமான ஆளொருவராக நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் கருதப்படுகின்ற ஆளொருவர்.

வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாத விடத்து தவறுகளுக்கான தண்டம்

**40.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் எந்த தவறொன்றுக்கு தண்டனையெதுவும் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்படவில்லையோ அந்த தவறொன்றைப் புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும் நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் தவறுகள்

**41.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது-

(அ) அந்த ஆட்கள்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட

குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(ஆ) அவ்வாட்கள் குழு, குழுமமொன்றாகவிருப்பின் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

தவறொன்றுக்கு குற்றவாளியாக கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர், அத்தகைய தவறு தமக்குத் தெரியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு தாம் உரிய விழிப்புக்கவனத்தை பிரயோகித்தார் என நிலைநாட்டுவாராயின், அவர் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

**42.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையாகவிருக்கின்ற அல்லது தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

தவறொன்றுக்கு உடந்தை யாயிருத்தல்

**43.** இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்றுக்கான குற்றவழக்கொன்று, அத்தவறு புரியப்படும் தேதி யிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் கழிந்தபின்னர் தொடுக் கப்படுதலாகாது.

குற்றவழக்குத் தொடுப்புக் கான காலத்தை வரையறுத்தல்.

**44**. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் எவரேனும் விலங்கின நலம்பேணல் அலுவலரினால் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக வழக்குத் தொடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கையெதுவும் அவருக்கெதிராகத் தொடுக் கப்படுதலாகாது.

விலங்கின நலம்பேணல் அலுவல ரொருவரினால் நல்லெண்ணத் துடன் தொடுக்கப்பட்ட வழக்குக்கான பாதுகாப்பு

விலக்களிப்பு

**45.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஒரு பீடை அல்லது பீடைகள் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அல்லது மனித உயிரை, விலங்கு உயிரை அல்லது பயிர்கள் உள்ளடங்கலான ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட எவையேனும் நியாயமான வழிமுறைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

நீக்கங்களும் பேணல்களும்

**46.** (1) (475 ஆம் அத்தியாயமான) விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2)(இதனகத்துப்பின்னர் “நீக்கப்பட்ட கட்டளைச்சட்டம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விலங்குகளைக் கொடுமைப் படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தை நீக்குதல் எவ்வாறிருப்பினும் –

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றினால் அல்லது நியாயசபை யொன்றினால் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எல்லா தீர்வைகளும், கட்டளைகளும் மற்றும் தீர்ப்புக்களும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்குட்படுத்தப்படுதலும் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவில் உள்ளதும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிராததுமான ஒவ்வொரு கட்டளை யும் அல்லது விதியும் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**47.** (1) அமைச்சர், மதியுரைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்கு கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எந்தக் கருமங்களுக்காக இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், மதியுரைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன், பின்வரும் கருமங்களுள் எவை தொடர்பிலும் அது அவசியமானது என அவர் கருதுகின்றவிடத்து, சர்வதேச நெறிமுறைகள் மற்றும் செயல்முறைகளைக் கவனத்திற்கொண்டு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) ஏதேனும் விலங்கினால் தூக்கிச்செல்லப்பட வேண்டிய அல்லது இழுத்துச் செல்லப்பட வேண்டிய அதிகபட்ச சுமை;

(ஆ) ஏதேனும் வாகனத்தில், கூண்டில் அல்லது அடைப்பில் விலங்குகளின் அளவுக் கதிகமான நெரிசலைத் தடுப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள்;

(இ) ஏதேனும் வகையினதான கடிவாளத்தின் அல்லது சேணத்தின் பயன்பாடு மற்றும் இலாடமடிப்பவர் ஒருவரின் தொழிலின் நடாத்துகையை ஒழுங்கு படுத்துதல்;

(ஈ) விலங்குகளைக் கைப்பற்றுவதில் எடுக்கப்பட வேண்டிய முற்காப்புகள்;

(உ) விலங்குகளை எந்த நிபந்தனைகள் மற்றும் வழிவகைகளின்கீழ் ஏற்றிச்செல்லலாமோ அவை;

(ஊ) மிருகக்காட்சிசாலை மற்றும் மீன் காட்சியகங்கள் தொடர்பான நிபந்தனைகள்;

(எ) வர்த்தகரீதியில் நடாத்தப்படும் தங்கிட வசதியுடனான நாய்ப்பட்டிகள், செல்லப் பிராணிகளுக்கான விடுதிகள் மற்றும் இவற்றையொத்த வேறு நிறுவனங்கள்;

(ஏ) ஆய்வுப் பூங்காக்களில் உள்ள விலங்குகள், விந்தைபுரியும் விலங்குகள் தொடர்பான நிபந்தனைகள்;

(ஐ) விலங்குகளைப் பரிசோதனைகளில் பயன் படுத்துதல் தொடர்பான நிபந்தனைகள்;

(ஒ) அடைத்துவைக்கப்பட்டிருக்கும் விலங்குகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பற்றிய நிபந்தனைகள்;

(ஓ) விலங்கின நலம் பேணல் தொடர்பான செயல்மு றைகள் பற்றிய கோவைகளை வகுத்தமைத்தல்;

(ஔ) செல்லப்பிராணிக் கடைகள் மற்றும் விலங்குகளில் உள்ள பீடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான நிபந்தனைகள்;

(க) கால்நடைகள் மற்றும் இணைந்த கைத்தொழில் கள் தொடர்பான நிபந்தனைகள்;

(ங) எந்த வயதின்கீழ் விலங்குகள் விற்கப்படு தலாகாதோ அந்த வயது;

(ச) எந்த நோக்கங்கள் தொடர்பில் விலங்குகள் அழகுசாதனங்கள், அழகுசாதனச் சேர்க்கைப் பொருட்கள் அல்லது அழகு சாதன உற்பத்திப்பொருட்களுக்கு பயன்படுத்தப் படலாமோ அந்த நோக்கங்கள்;

(ஞ) விலங்குப் பயிற்சிக்கான நிபந்தனைகள்;

(ட) விலங்குகளை வைத்திருப்பதற்கான மற்றும் இனப்பெருக்கத்திற்கான செயல்முறைகளின் நிபந்தனைகள்;

(ண) சுகயீனம் அல்லது ஊறின் போது விலங்குகளைப் பராமரித்தல் தொடர்பான நிபந்தனைகள்; அத்துடன்

(த) 35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விலங்கு பராமரிப்பு நிலையம், அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு அல்லது ஆளினால் பேணப்படவேண்டிய நியமங்கள், அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முறை மற்றும் அவற்றை தாபித்தல், கண்காணித்தல் மற்றும் சோதனையிடுவதற்கான நடவடிக்கைமுறை.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களின்பின்னர் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அது அங்கீ கரிக்கப்படாத தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**48**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலொழிய- பொருள்கோடல்

"விலங்கு" என்பது, மனிதனைத் தவிர்ந்த ஏதேனும் உயிருள்ள பிராணி எனப் பொருள்படும் என்பதுடன் வீட்டு விலங்கு, பண்ணை விலங்கு, அடைத்துவைக்கப்பட்ட விலங்கு, வனவிலங்கு, உடனிருக்கும் விலங்கு, நீர்வாழ் விலங்கு, கட்டாக்காலி விலங்கு மற்றும் உணவுக்கான விலங்கை உள்ளடக்கும்;

"விலங்கு பராமரிப்பு நிலையம்" என்பது, விலங்கு மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது விலங்கின மருத்துவமனை தவிர்ந்த விலங்குகளைப் பராமரிப்பதற்கான இடமொன்று எனப் பொருள்படும்;

"விலங்கின நலம் பேணல் அலுவலர்" என்பது, எவரேனும் அரசாங்க விலங்கு மருத்துவர் எனப் பொருள்படும்;

"விலங்கின நலம்பேணல் சங்கம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் அரச சார்பற்ற ஒழுங்கமைப் பொன்றாக பதிவுசெய்யப்பட்ட விலங்கின நலம் பேணல் சங்கம் ஒன்று எனப் பொருள்படும்;

"கூண்டு" என்பது, அடைப்பு, நாய்க்கூடு, கூடாரம் அல்லது இதனையொத்த வேறு ஏதேனும் தங்கிடம் எனப் பொருள்படும்;

"அடைத்துவைக்கப்பட்ட" என்பது, விலங்கொன்று தொடர்பில் பின்வருவன உட்பட அதன் நடமாட்டச் சுதந்திரத்தை மட்டுப்படுத்துதல்

எனப் பொருள்படும்: -

(அ) அணுகுகை மற்றும் நடமாட்டச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் வகையில் ஒரு கூண்டில், குழியில், முற்றத்தில், வயலில் அல்லது வேறு அடைப்பில் வைப்பதன்மூலம்; அத்துடன்

(ஆ) சிறகைக் கத்தரித்தல், கட்டிவைத்தல் அல்லது வேறு முறையிலான மட்டுப்பாட்டின்மூலம்;

"அரசாங்க விலங்கு மருத்துவர்" என்பது, விலங்கு உற்பத்தி திணைக்களத்தின் எவரேனும் விலங்கு மருத்துவர் எனப் பொருள்படும்;

"தேற்றுதல் நிலையம்" என்பது, நோயுற்ற அல்லது வயதான அல்லது ஊனமுற்ற விலங்கினங்களை வைத்திருப்பதற்கெனத் தாபிக்கப்பட்ட உறை விடம் ஒன்று எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு இச்சட்டம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"அளவுக்கதிகமாக நடாத்திச்செல்லல்" என்பது, விலங்கொன்று தொடர்பில் கொடுமையான அல்லது துன்பமேற்படுத்தும் நிலைமைகளின் கீழ் வலோத்காரமாக நடக்கவைத்தல் எனப் பொருள்படும்;

"வேதனை" என்பது, துன்பத்தையும் உள அல்லது உடல்ரீதியான துயரத்தையும் உள்ளடக்கும்;

"சமாதான அலுவலர்" என்பது, எவரேனும் அரசாங்க விலங்கு மருத்துவரையும் உள்ளடக்கும்;

“ஆள்” என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்கும்;

“பீடை” என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளை உடையதாதல் வேண்டும்;

“சிறகைக் கத்தரித்தல்” என்பது, பறவை ஒன்று தொடர்பில் பறவையொன்றின் சிறகை ஊனமடையச் செய்தல் அல்லது பறவை யொன்றின் சிறகினது ஒரு பாகத்தை அகற்றிவிடுதல் எனப் பொருள்படும்;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது, இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஒழுங்குவிதிகளினால் விதித் துரைக்கப்பட்டவை எனப் பொருள்படும்;

“உறைவிடம்” என்பது, விலங்குகளைக் காப்பாக வைப்பதற்கும் பேணுவதற்கும் பயன் படுத்தப்படும் ஓர் உறைவிடம் அல்லது தேற்றுதல் நிலையம் அல்லது வேறு ஏதேனும் அமைவிடம் அல்லது இடைப்போக்கு நிலையம் எனப் பொருள்படும்;

“பொறி” என்பது, விலங்கொன்றைக் கொல்லுகின்ற, பொறியில் அகப்படவைக்கின்ற, சிக்க வைக்கின்ற, தடுத்து வைக்கின்ற அல்லது அதன் நடமாட்டத்தைத் தடுக்கின்ற நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் ஒரு வலை, கூண்டு, கண்ணி, தொழுவம், கிடங்கு அல்லது மின்சார உபாயம் அல்லது இயந்திர நுட்பப்பொருள் எனப் பொருள்படும்; ஆனால் –

(அ) விலங்கொன்றைக் கையாளு வதற்கு, மேய்ப்பதற்கு அல்லது

ஒருங்குதிரட்டுவதற்குப் பயன்படுத்தப் படும் ஏதேனும் வேலி அடைக்கப்பட்ட காணி இடப்பரப்பை அல்லது வேறு பயனுறுதியுள்ள அடைப்பை; அல்லது

(ஆ) விலங்கொன்றை ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கூண்டைப் போன்ற ஏதேனும் அடைப்பை,

உள்ளடக்காது;

“வாகனம்” என்பது, ஏற்றிச்செல்லும் வழிவகையொன்றாக பயன்படுத்தப்படும் ஏதேனும் போக்குவரத்துச் சாதனம் எனப் பொருள்படும்;

“விலங்கு மருத்துவர்” என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விலங்கு மருத்துவர் ஒருவர் எனப் பொருள்படும்;

“விலங்கொன்றின் விலங்கு மருத்துவ சிகிச்சை” என்பது-

(அ) விலங்கொன்றின் நிலைமை பற்றி விலங்கு மருத்துவர் ஒருவருடன் கலந்தாலோசித்தல்;

(ஆ) விலங்கு மருத்துவரொருவரினால் விலங்கொன்றின்மீது புரியப்படும் மருத்துவ அல்லது அறுவை மருத்துவ சிகிச்சை நடவடிக்கைமுறை; அல்லது

(இ) விலங்கொன்றின்மீது புரியப்படும் குணப்படுத்தும் அல்லது தடுப்பு முறையான தன்மையொன்றிலான ஒரு மருத்துவ நடவடிக்கைமுறை,

எனப் பொருள்படும்;

"விலங்கொன்றின் நலம் பேணல்" என்பது, விலங்கொன்றின் சுகாதாரம், காப்பு மற்றும் நல்வாழ்வை உள்ளடக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**49.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

[பிரிவு 31]

**அட்டவணை**

**படிவம் "அ"**

**விலங்கின நலம் பேணல் பணிப்பு**

விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் பெயர்:-

முகவரி:-

விலங்கு வைக்கப்படுகின்ற முகவரி:-

விலங்குபற்றிய அடையாளங் காணுகை

எவையேனும் இருப்பின்:-

விசேட குறிகள் எவையேனும் இருப்பின்:-

விலங்கின் பால், இனம் மற்றும் வகை:-

எந்நிலைமைகளின்கீழ் விலங்கு வைத்திருக்கப்படுகின்றது:-

வழங்கப்பட்ட பணிப்பு:-

குறிப்புகள் எவையேனும் இருப்பின்:-

திகதி மற்றும் நேரம்:-

பரிசோதகரின் கையொப்பம்:-

பெயரும் பதவிப்பெயரும்:-

**விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினாலான வெளிப்படுத்துகை**

சொல்லப்பட்ட விலங்கின்/விலங்குகளின் நலன்கருதி எனக்கு வழங்கப்பட்ட மேற்போந்த பணிப்பினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன். சொல்லப்பட்ட பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு இத்தால் பொறுப் பேற்கின்றேன்; அவ்வாறு செய்யத்தவறின் விலங்கின நலம் பேணல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக நான் குற்றம்சாட்டப்படலாம் என்பதை அறிவேன்.

விலங்குக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் கையொப்பம்:-

திகதி:-

(இணங்கியொழுகுகை மறுக்கப்படும் விடயத்தில், பரிசோதகர் அதனையும் அவரினால் எடுக்கப்பட்ட நடடிக்கைகளையும், குறிப்புகள் நிரலின்கீழ் பதிதல் வேண்டும்)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.